**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 , திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**
நீதித்துறை நடுவர் எண்.3 (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 11 -ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 420/2025**

**F.NO.4823/2025**
**CNR.NO.TNTU02-004825-2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
ஆலங்காயம் காவல் நிலையம்,
ஆலங்காயம்.
குற்ற எண். 232/2023 ......புகார்தாரர்

//எதிரிடை//

முரளிதரன் த/பெ. விஸ்வநாதன் .....குற்றஞ்சாட்டப்பட்டவர்

( குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி. எண்.420/2025 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | ஆலங்காயம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.232/2023 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 294(b), 325 |

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

| | | |
|---|---|---|
| 4 | குற்றம் முன்னிலைப்படுத்தப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 294(b), 325 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் மற்றும் தந்தை/கணவர் பெயர் | முரளிதரன் த/பெ. விஸ்வநாதன் |
| 6 | தொழில் | – |
| 7 | முகவரி | பனந்தோப்பு, நிம்மியம்பட்டு கிராமம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். |
| நாள் | | |
| 8 | குற்ற நிகழ்வு | 21.09.2023 |
| 9 | புகார் | 27.09.2023 |
| 10 | கைது செய்யப்பட்ட நாள் | எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 11 | எதிரி பிணையில் வந்த நாள் | –– |
| 12 | வழக்கு துவங்கிய நாள் | 24.02.2026 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 11.03.2026 |
| 14 | தீர்ப்பு | விடுதலை |
| 15 | தாமதக் காரணம் | –– |
| வழக்கின் நிலை | | |
| 16 | பிணைக்காலம் | –– |
| 17 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 09.06.2025 |
| 18 | பிரிவு 263 BNSS (முதல் கேள்வி) | 02.03.2026 |

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | -- | | |
| 20 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா. 1 | 06.03.2026 | -- |
| | | அ.சா. 2 | 10.03.2026 | 10.03.2026 |
| 21 | பிரிவு 351 BNSS (வினாவல்) | 11.03.2026 | | |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இந்த வழக்கு 09.06.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ரமேஷ்பாபு, அவர்களும் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

## <u>தீர்ப்புரை</u>

### <u>1.குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>

இவ்வழக்கில் கடந்த 21.09.2023 அன்று இரவு சுமார் 23.00 மணியளவில், வாதியின் செல்போனை வாங்கி சென்று பின்னர் வாதி திரும்ப செல்போனை கேட்டபோது இவ்வழக்கின் எதிரி வாதியை பார்த்து டேய் தேவிடியா பையா உன் செல்போனை தர முடியாது போடா என்று என்று தகாத வார்த்தையால் திட்டி, வாதியை கையாலும், கொம்பாலும் அவரது முகம், தலை, முழங்கை, மூக்கு மற்றும் கால்கள் மீது தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதால், இ.த.ச. பிரிவுகள் 294(b) மற்றும் 325–இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது, எதிரி அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

(3) அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.2** ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 9** வரையிலான ஆவணங்கள் மற்றும் **அ.சா.பொ 1– ம்** வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

(4) அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து இ.த.ச. பிரிவுகள் 294(b), மற்றும் 325 –ன் கீழ் வினாவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**(5) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

(i) அ.சா.1 கடந்த 27.09.2023 அன்று நாட்றம்பள்ளி வாணியம்பாடி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆலங்காயம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. ராமதாஸ் அங்கு சென்று அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

**6). இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இந்திய தண்டனை சட்ட பிரிவு 294(b) மற்றும் 325 இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

**அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற விசாரணையின் சுருக்கம் :**

(i) அ.சா.1. வினோத்குமார் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர். அவர் தனது நீதிமன்ற விசாரணையில், "நான் கடந்த 21.09.2023 அன்று இரவு

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

11.00 மணிக்கு, நிம்மியம்பட்டு வாரச்சந்தையில் இருந்தபோது யாரோ ஒருவர் வந்து என்னை தாக்கிவிட்டு சென்றுவிட்டார். எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்ததால் எதிரி என்னை தாக்கியிருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நான் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன்" என்று சாட்சியம் அளித்ததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், அவர் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக எந்த பதிலையும் அளிக்கவில்லை.

(ii) இவ்வழக்கின் அ.சா.2 அன்பழகன் அவர்கள், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. ராமதாஸ், அ.சா.1 அளித்த (அ.சா.ஆ.2) புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், (அ.சா.ஆ.3) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கிருபாகரன் மற்றும் நந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் (அ.சா.ஆ 4) பார்வை மகசர் மற்றும் (அ.சா.ஆ 5) மாதிரி வரைபடம் தயார் செய்து, சம்பவயிடத்தில் இருந்து அ.சா.பொ 1 விறகு கொம்பு ஒன்றை (அ.சா.ஆ 6) கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி, அதனை (அ.சா.ஆ 7) படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா1 க்கு சிகிச்சை அளித்த திரு. கணேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் (அ.சா.ஆ 8) பெற்று, இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இதச பிரிவுகள் 294(பி), 323 லிருந்து இதச பிரிவுகள் 294(பி), 325 ஆக பிரிவு மாறுதல் அறிக்கையின் (அ.சா.ஆ 9) மூலம் பிரிவு மாறுதல் செய்து, அவரது புலன் விசாரணையை முடித்து, இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

(iii) அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி தன்னை தகாத வார்த்தையால் திட்டி, அவரது கையால் தனது முகம், மூக்கின் மீது அடித்தும், பின்னர் அங்கிருந்த கொம்பை எடுத்து தன் முன்பக்க தலை, வலது முழங்கை மற்றும் இரண்டு கால்களின் மீது அடித்து காயம் ஏற்படுத்தியதாக கூறியுள்ளபோதிலும், தனது நீதிமன்ற விசாரணையில் எதிரி மீதான மேற்கண்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

(iv) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 குற்றசம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு குறித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு, சாட்சியம் அளித்துள்ளபோது, புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்பதால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), மற்றும் 325–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>7). இறுதியாக,</u>

அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 294(b), மற்றும் 325– இன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு  செய்து, எதிரியை BNSS பிரிவு 271(1)– இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

இவ்வழக்கில் **C.P.No. 5/24** –இல் உள்ள வழக்குச்சொத்தான சுமார் 100 செமீ நீளமும், 11 செமீ சுற்றளவும் கொண்ட **விறகு கொம்பு** ஒன்று மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

எதிரி எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 11 –ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ)
திருப்பத்தூர்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | திரு. வினோத்குமார் த/பெ. சிவக்குமார் |
| **அ.சா.2** | திரு. அன்பழகன் த/பெ. லட்சுமணன் |

**அரசு தரப்பு சாட்சி ஆவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | புகார் வாக்குமூலம் |

| | |
|---|---|
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகசர் |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.6** | கைப்பற்றுதல் மகசர் |
| **அ.சா.ஆ.7** | படிவம் – 91 |
| **அ.சா.ஆ.8** | காயச்சான்றிதழ் |
| **அ.சா.ஆ.9** | பிரிவு மாற்றுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்– CP.No. 5/2024**

**அ.சா.பொ.1** – சுமார் 100 செமீ நீளமும், 11 செமீ சுற்றளவும் கொண்ட **விறகு கொம்பு** ஒன்று.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்று ஆவணங்கள் – இல்லை**

**குறிப்பு**

1. சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. வழக்கின் முடிவு பற்றி சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச்சொத்துக்கள் பற்றிய உத்தரவை வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ)
திருப்பத்தூர்.